# 10

# ஸக்காத்

அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளுள் செல்வமும் ஒன்றாகும். அதிலிருந்து செல்வந்தர்கள் மட்டுமன்றி அனைவரும் பயன்பெற வழிசெய்ய வேண்டும். அதற்கான வழிமுறைகளுள் ஒன்றாகவே இஸ்லாம் ஸக்காத்தை அறிமுகம் செய்துள்ளது.

ஸக்காத் என்ற சொல் தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி போன்ற கருத்துக்களைத் தருகின்றது. ஸக்காத் வழங்குவதனால் அதனை வழங்குபவரின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைகின்றது. செல்வம் பாதுகாப்புப் பெறுகிறது. அவரது உள்ளம் தூய்மை பெற்று தயாளம், பிறர் நலம் பேணல் போன்ற நற்குணங்கள் வளர்ச்சி பெறுவதுடன் சுயநலம், கர்வம், கருமித்தனம் போன்ற துர்க்குணங்களில் இருந்து நீங்குகின்றது.

**ஒரு முஸ்லிம் தன்னிடமுள்ள சொத்து, செல்வங்களில் இருந்து குறிப்பிட்ட ஓர் அளவை அல்குர்ஆன் வரையறுத்துக் குறிப்பிடும் எட்டுப் பிரிவினரிடையே தர்மமாக வழங்குது இஸ்லாமிய வழக்கில் ஸகாத் எனப்படுகின்றது.**

இது இஸ்லாத்தின் அடிப்படை வணக்கங்களுள் ஒன்றாகவும் இஸ்லாமியப் பொருளாதார நடவடிக்கைகளுள் முக்கியமானதோர் அம்சமாகவும் காணப்படுகின்றது. இதனைக் கூட்டாக நிறைவேற்றுவதை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

அல்குர்ஆனில் சுமார் 83 இடங்களில் தொழுகையோடு இணைத்து ஸக்காத் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஸக்காத்தை நிறைவேற்றாதுவிட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் அல்குர்ஆனும் அல் ஹதீஸும் எச்சரிக்கை செய்துள்ளன.

‘‘நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தும் ஸக்காத்தைக் கொடுத்தும் வாருங்கள்.’’ (2: 110)

‘‘மேலும், பொன்னையும் வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை இறைவழியில் செலவிடாதிருப்பவர்களுக்கு நோவினை செய்யும் வேதனையுண்டு என்று (நபியே!) நீர் கூறும்! (நபியே!) அந்த நாளில் (அவர்கள் சேமித்து வைத்திருந்த செல்வத்தை) நரக நெருப்பிலிட்டுக் காய்ச்சி அதைக் கொண்டு அவர்களின் நெற்றிகளிலும் விலாப்புறங்களிலும் முதுகுகளிலும் சூடு போடப்படும். (மேலும்) இதுதான் நீங்கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தவை. எனவே, நீங்கள் சேமித்து வைத்ததைச் சுவைத்துப் பாருங்கள் என்று கூறப்படும்.’’ (9: 34, 35)

''ஸக்காத் மூலம் நீங்கள் உங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.'' (அபூதாவூத்)

''ஸக்காத்தை வழங்காது தடுத்துக்கொள்ளும் சமூகத்தினரை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்.'' (தபரானி)

**ஸக்காத் கடமையை முறையாக நிறைவேற்றுவதால் கிடைக்கக்கூடிய சில நன்மைகள்**

- ★ சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைதல்
- ★ செல்வம் பெருகுதல்
- ★ வறுமை நீங்குதல்
- ★ குற்றச் செயல்கள் குறைதல்
- ★ பரக்கத் ஏற்படுதல்
- ★ மறுமையில் ஈடேற்றம் கிடைத்தல்
- ★ அன்பு வளர்ந்து குரோதம் நீங்குதல்
- ★ ஒருவர் தனது செல்வத்தில் அல்லாஹ்வுக்காகச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றிய உளத் திருப்தியைப் பெறுதல்

**ஸக்காத் விதியாவதற்கான நிபந்தனைகள் (ஷர்த்துகள்)**

1. முஸ்லிமாக இருத்தல்
2. சுதந்திரவானாக இருத்தல்
3. பொருள் உரிமை பெற்றிருத்தல்
4. நிஸாபை அடைந்திருத்தல்
5. வருடம் பூர்த்தியாக இருத்தல் (ஹவ்ல்)
6. சொத்து வளர்ச்சியடைவதாக இருத்தல்
7. அடிப்படைத் தேவைகளுக்கு மேலதிகமாக இருத்தல்

**ஸக்காத் விதியாகும் பொருட்கள்:**

1. தங்கம், வெள்ளி, பணம்
2. தானியங்கள் (கோதுமை, நெல் போன்றன)
3. கால்நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகம்)
4. பழவகைகள் (பேரீச்சை, திராட்சை)
5. வியாபாரப் பொருட்கள்

## தங்கம், வெள்ளி, நாணயங்கள்

தங்கத்தின் மீது ஸக்காத் கடமையாகும் ஆகக் குறைந்த நிஸாப் 20 மிஸ்கால் அல்லது அதற்குச் சமமான 85 கிராம் நிறையாகும். இதற்கு இரண்டரை வீதம் ஸக்காத் வழங்கப்பட வேண்டும்.

வெள்ளிக்கான ஆகக்குறைந்த நிஸாப் ஐந்து ஊக்கியாக்கள் அல்லது அதற்குச் சமமான 595 கிராம் நிறையாகும். அதிலிருந்து இரண்டரை வீதம் ஸக்காத் வழங்கப்பட வேண்டும்.

பணத்திற்கான நிஸாப் தங்கம் அல்லது வெள்ளியின் நிஸாபை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். இதிலிருந்து இரண்டரை வீதம் வழங்கப்பட வேண்டும்.

## கால்நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகை)

**ஆடுகளுக்குரிய ஆரம்ப நிஸாப் 40 ஆடுகளாகும்.**

| | ஆடுகளின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய பெண் ஆடுகள் |
|---|---|---|
| 1. | 40 முதல் 120 ஆடுகள் வரை | 01 பெண் ஆடு |
| 2. | 121 முதல் 200 ஆடுகள் வரை | 02 பெண் ஆடுகள் |
| 3. | 201 முதல் 399 ஆடுகள் வரை | 03 பெண் ஆடுகள் |
| 4. | 400 முதல் 499 ஆடுகள் வரை | 04 பெண் ஆடுகள் |

ஆடுகளின் எண்ணிக்கை 400ஐ அடைந்து விட்டால் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஒரு பெண் ஆடு வீதம் வழங்கப்பட வேண்டும்.

**மாடுகளுக்குரிய ஆரம்ப நிஸாப் 30 ஆகும்.**

30 மாடுகளுக்கு ஒரு வயதுடைய ஒரு காளை மாடு ஸக்காத் ஆக வழங்கப்பட வேண்டும். 40 மாடுகள் இருப்பின் அதற்கு இரண்டு வயதுள்ள ஒரு பசு ஸக்காத்தாக வழங்கப்பட வேண்டும். இதற்கு மேற்படின் இவ்விரு இலக்கங்களினதும் தனித்தனிப் பெருக்கங்களுக்கோ அல்லது கூட்டுத் தொகைகளின் பெருக்கங்களுக்கோ ஸக்காத் கணிக்கப்பட வேண்டும். உதாரணம் 65 மாடுகள் இருப்பின் ஒரு வயதுள்ள இரண்டு காளை மாடுகள் வழங்கப்பட வேண்டும்.

**ஒட்டகத்துக்கான ஆரம்ப நிஸாப் 05 ஆகும்.**

ஐந்து ஒட்டகங்களுக்கு 01 ஆடு என்று தொடங்கி 20 ஒட்டகங்களுக்கு 04 ஆடுகள் என்பது வரை சென்று, ஒட்டகங்களின் எண்ணிக்கை 25 ஐ அடைந்து விட்டால் ஒரு வயதுள்ள ஒரு பெண் ஒட்டகை கொடுக்க வேண்டும்.

### தானியங்கள்





தானிய வகைகளுக்கான நிஸாப் ஐந்து வஸகுகள் ஆகும். விவசாய உற்பத்திகளான கோதுமை, நெல், போன்ற தானிய வகைகளை அறுவடை செய்ததும் அவை பாவனைக்குத் தயார் செய்யப்பட்ட நிலையில் ஐந்து வஸக் (தற்காலத்தில் சுமார் 675 கிலோ கிறாம்) அளவை எட்டுமாயின் அதில் ஸக்காத் கடமையாகும்.

விவசாய உற்பத்தியானது உற்பத்திச் செலவினங்களுக்கு உட்பட்டதாயின் ஐந்து வீதமும் முழுமையாக இயற்கை வளங்களால் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் பத்து வீதமும் அறுவடை முடிந்ததுமே வழங்கப்பட வேண்டும்.

### பழ வகைகள் (பேரீச்சை, திராட்சை)





தானியத்துக்குரிய ஸக்காத் விதிமுறைகள் யாவும் பழவகைகளுக்கும் உரியதாகும்.

### வியாபாரப் பொருட்கள்:

வர்த்தக நடவடிக்கையில் ஒரு வருடப் பூர்த்தியின்போது வியாபாரப் பொருட்களின் சந்தைப் பெறுமானம் பணத்திற்கான நிஸாபை எட்டியிருந்தால் அதிலிருந்து இரண்டரை வீதம் ஸக்காத் வழங்கப்பட வேண்டும்.

இவற்றுடன் புதையல் போன்றவற்றுக்கு நிஸாப் மற்றும் ஹவ்ல் என்பன கிடையாது. அவை கிடைக்கப் பெற்றதும் அவற்றிலிருந்து ஐந்தில் ஒரு பகுதி ஸக்காத்தாக வழங்கப்படல் வேண்டும்.

## ஸக்காத் பெறத் தகுதியுடையவர்கள்

ஸக்காத் பெறத் தகுதியுடையோர் யாவர் என்பதை அல்குர்ஆன் தெளிவாக விபரித்துள்ளது.

''தானம் எல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவோருக்கும், வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாக அல்லாஹ் ஏற்படுத்தியதாகும். அல்லாஹ் (அனைத்தையும்) மிக அறிந்தவனும் ஞானமுடைய வனாகவும் இருக்கிறான்.'' (9:60)

***இஸ்லாத்தின் மிக முக்கியமான இக்கடமையைத் தெளிவாக விளங்கிச் சரிவர நிறைவேற்றும் வாய்ப்பினை அல்லாஹ் அனைவருக்கும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக!***

### பயிற்சி

*1. ஸக்காத் என்ற பதத்தின் மொழிக் கருத்து யாது?*

*2. ஸக்காத் விதியாவதற்கான நிபந்தனைகள் யாவை?*

*3. ஸக்காத்தின் பயன்களைக் குறிப்பிடுக.*

*4. ஸக்காத் விதியாகும் பொருட்களைக் குறிப்பிடுக.*

*5. ஸக்காத் பெறத் தகுதியானோரைப் பட்டியற்படுத்துக.*

### செயற்பாடு

*தொழுகையுடன் ஸக்காத் இணைத்துக் கூறப்பட்ட அல் குர்ஆன் வசனம் ஒன்றையும் ஸக்காத் பற்றி வந்துள்ள ஹதீஸ் ஒன்றையும் எழுதிக் காட்சிப்படுத்துக.*